# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1906/49 - 2015 මාර්තු 20 වැනි සිකුරාදා - 2015.03.20

*1906/49 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

*கீழ்க்காணும் காணி மாத்தறை - கதிர்காம புகையிரத வீதியின் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் இழக்கப்பட்ட பிரவேச வீதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், தெவுந்தரை பிரதேச செயலாளர் பிரிவில், வெல்லபட பத்துவ மேற்கு சிறு பிரிவில், நாஓடுன்ன கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2014.03.19 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட எம்ஆர்/டீவீஎன்/2013/788 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு 'ஏ' எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் எல்லைகள் பின்வருமாறு :

*01.* **துண்டு 'ஏ' - மத்துமலியனகேவத்த - விஸ்தீரணம் : சுமார் 0.0088 ஹெக்டயார்**

வடக்கு : மாத்தறை - கதிர்காம உத்தேசித்த புகையிரத வீதிக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ள மத்துமலியனகே வத்த மற்றும் வீதி ; கிழக்கு : வீதி மற்றும் கெலிதுவ விதான கமகே பியதாஸ உரிமை கோரும் மத்துமலியனகே வத்த ; தெற்கு : கெலிதுவ விதான கமகே பியதாஸ உரிமை கோரும் மத்துமலியனகே வத்த ; மேற்கு : சோமசிறி மடவல கமகே உரிமை கோரும் மஹகெதரவத்த மற்றும் மாத்தறை - கதிர்காம வீதி, உத்தேசித்த புகையிரத வீதிக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட மத்துமலியனகே வத்த.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பு இல. : எல்டி4/3/11/2013/என்ஆர்டீ/614.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2014.10.31.

04 - 197